සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved



# புலமைக்கதிரின் இளங் கதிர் 4

திரு.க.சந்திரகுமார்,
(B.Ed , Dip.In.Teach, SLTS-1)
ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு



## தரம்– 04

## மாணவர்களுக்கான..

## கதிர் 7



## பாடரீதியாக

- நுண்ணறிவு
- கணிதம்
- தமிழ்
- சுற்றாடல் சார் செயற்பாடு

**09 .07 .2021 - 15 .07 .2021**

வினாத்தாளக்ளை தொடர்ந்து பெற்றுக் கொள்ள
WhatsApp Viber 0774940556 facebook Chandrakumar Ganeshamoorthy

திரு. க. சந்திரகுமார். (0774940556) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---


සියලුම හිමිකම් ඇවිරිණි ) முழுப் பதிப்புரிமையுடையது ) All Rights Reserved )




## நுண்ணறிவு - 07

* 1ம்,2ம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள படங்களில் இருந்து வேறுபடும் உருவைக்கண்டு அதன் கீழ் கோடிடுக?

01.



02.



* 3ம், 4ம் வினாக்களில் முதலில் இரு சொற்களின் தொடர்பை அவதானித்து அடுத்த சொல்லுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிவு செய்க?

3. வைத்தியர் – சிகிச்சை, நீதிபதி – ..........................

1. தீர்ப்பு  2. தண்டனை  3. விடுதலை

4. விரல் – உடல் – கிளை – ................................

1. கூட்டுறவு அலுவலகம்  2. மரம்  3. கிளை

* கீழே தரப்பட்டுள்ள கடிதத்தைக் கொண்டு வினாக்களுக்கு விடைதருக.

> பங்குனி 28
>
> **அண்ணா ,**
>
> **நான் வருகின்ற மாதம் ஊருக்கு வருவேன்.**
>
> **- கமலன்**

5. இதன்படி கமலன் எப்போது ஊருக்கு வருவான்?

1. ஏப்பிரல்  2. பெப்ரவரி  3. மார்ச்

6. இக்கடிதம் எழுதியவர் கடிதம் அனுப்பியவருக்கு என்ன உறவுமுறை?

1. அண்ணன்  2. தம்பி  3. கூறமுடியாது.

7. மைதானம் ஒன்றில் மஞ்சள், நீலம், சிவப்பு, எனும் ஒழுங்கில் 24 கொடிகள் நடப்பட்டுள்ளன. 20வது கொடியின் நிறம் யாது?

1. நீலம்  2. சிவப்பு  3. மஞ்சள்

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்
www.lkedu.lk

8. இருபக்கமும் சமமாக உள்ள விடைத் தொகுதியை தெரிவு செய்க?

1. 34K2267 - 7622K43
2. 3554763 - 3554672
2. 3K3E4CT - 3K3E4CT

* ஓட்டப்போட்டியில் மாணவர்கள் ஐந்துபேர் ஓடிமுடித்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன?


- சது – 7 நிமிடம்
- நிது – 6 நிமிடம்
- மது – 5 நிமிடம்
- ரது – 8 நிமிடம்
- மிது – போட்டியை நிறைவு செய்யவில்லை.

9. மாணவர்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்த ஒழுங்கு முறை?

1. மது, நிது, சது, ரது
2. ரது, சது, மிது, நிது
3. சது, மது, ரது, மிது

10. இப்போட்டியில் முதலாவதாக வந்தவர் யார்?

1. மது 2. ரது 3. சது



11 மேலே உருவில் அதிகமாகக் காணப்படுவது?

1. கதிரை 2. மேசை 3. தளபாடம்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| லு | 4 | 1 | 6 | மு | ல | ழு | 2 | ம | ம | ப | ல | 1 | 3 | 4 |
| 3 | ப | லு | 3 | 4 | 1 | ம | 4 | ப | ல | 3 | 7 | 4 | பு | 1 |

* மேலே உள்ள கட்டமைப்பபைக் கொண்டு இரு வினாக்களுக்கும் விடையைத் தெரிவு செய்க?

12. இங்கு தரப்பட்டுள்ள ‘ம’ எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 5 3. 4

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

13. இங்குள்ள ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?

1. 25 2. 23 3. 30



www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි ) முழுப் பதிப்புரிமையுடையது ) All Rights Reserved )



* 14, 15 ஆகிய வினாக்களுக்கு பொருத்தமான விடையை அட்டவணையைக் கொண்டு தெரிவு செய்க?

| | | | பச்சை |
|---|---|---|---|
| மஞ்சள் | | | சீதா |
| சிவப்பு | | மாலா | ரூபா |
| நீலம் | கவி | விதுசா | பானு |


**14.** நான்கு நிறங்களையும் விரும்பும் பிள்ளைகள்

1. விதுஷா    2. பானு    3. சீதா

**15.** பச்சை நிறத்தை விரும்பாத பிள்ளை

1. மாலா    2. ரூபா    3. பானு

* அருகே உள்ள படத்தைக் கொண்டு 16,17வினாக்களுக்கு விடை தருக?




**16.** இவ் வாழ்விடத்தை அமைக்கும் பறவை யாது?

1. கொண்டைக்குருவி
2. தூக்கணாங்குருவி
3. கணாங்கோழி

**17.** இப் பறவை இவ் வாழ்விடத்தில் நுழையும் இடத்தைக் காட்டுவது?

1. A    2. B    3. C

**18.** எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.

1. பாடசாலைக்குச் சமூகமளித்தான்
2. பாடசாலைக்குச் சமுகமளித்தான்
3. பாடசாலைக்கு சமுகமழித்தான்

**19.** வகுப்பிலுள்ள 32 மாணவர்களுக்கும் ஆளுக்கு 6பிஸ்கட்டுக்கள் வீதம் வழங்க 12 பிஸ்கட் கொண்ட பக்கற்றுக்கள் எத்தனை வாங்க வேண்டும்?

1. 16    2. 17    3. 15

**20.** இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.

முதலெழுத்து அவலில் உண்டு அயலில் இல்லை இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு களத்தில் இல்லை மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு குடுமியில் இல்லை புதிரில் மறைந்துள்ள சொல் எது? என்பதை எழுதுக?

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

..........................................................................................



www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි | முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved |



# புலமைக்கதிர் 4

## கணிதம் - 07

**01. கூட்டுவோம்**

1. 1475 + 1266 = ______
2. 1303 + 2284 = ______
3. 6847 + 2183 = ______
4. 7392 + 1548 = ______
5. 5868 + 3153 = ______

**02. கழித்தல்**

1. 9925 - 5406 = ______
2. 6059 - 2091 = ______
3. 4754 - 2102 = ______
4. 3832 - 2466 = ______
5. 5570 - 3267 = ______


**03. வகுக்குக**

1. 2 ) 344
2. 2 ) 605
3. 2 ) 476
4. 186 ÷ 2 =
5. 268 ÷ 2 =


**04. அட்டவணையை நிரப்புவோம்**

| X | 5 | 9 |
|---|---|---|
| 2 | | |
| 10 | | |
| 5 | | |
| 3 | | |
| 1 | | |

**05. தரப்பட்ட நேரத்தை கடிகார முகத்தில் வகைக்குறிப்போம்**




நேரம் 2.00 மணி





நேரம் 5.00 மணி

திரு. க. சந்திரகுமார்


திரு. க. சந்திரகுமார். (0774940556) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

සියලුම හිමිකම් ඇවිරිණි ) முழுப் பதிப்புரிமையுடையது ) All Rights Reserved )






நேரம் 1.00 மணி




நேரம் 11.00 மணி

**06. பிரசின்னங்களைத் தீர்த்து விடை எழுதுக**

1. முதலாவது குவியலில் 348 தேங்காய்களும் இரண்டாவது குவியலில் 427 தேங்காய்களும் உள்ளன எனின் இரண்டு குவியலிலும் உள்ள மொத்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

   ..........................................................................................................................................

2. ஒருவருக்கு 5 கொப்பிகள் வீதம் 39 மாணவர்களுக்கு வழங்க எத்தனை கொப்பிகள் தேவை?

   ..........................................................................................................................................

3. 58 நெல்லிக்காய்களை சமமான இரண்டு குவியல்களாக்கும் போது ஒரு குவியலில் உள்ள நெல்லிக் காய்கள் எத்தனை?

   ..........................................................................................................................................

4. 44 கத்தரிக் கன்றுகளை இவ்விரண்டாக நடுவதற்கு எத்தனை குழிகள் வெட்டப்பட வேண்டும்?

   ..........................................................................................................................................

5. ஒருவருக்கு இரண்டு வீதம் 25 மாணவர்களுக்கு கொடுப்பதற்கு எத்தனை பென்சில்கள் தேவை?

   ..........................................................................................................................................

**07. முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் எழுதுக**

1. ......................... 1725 .........................
2. ......................... 2430 .........................
3. ......................... 3339 .........................
4. ......................... 6906 .........................
5. ......................... 4070 .........................

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved /



**08. விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?**

1. ஒரு பேனா 20 ரூபாய்
2. ஒரு அடிமட்டம் 12 ரூபாய்
3. ஒரு அழிறப்பர் 8 ரூபாய்
4. ஒரு பென்சில் கூராக்கி 15 ரூபாய்
5. ஒரு நிறப்பெட்டி 58 ரூபாய்
6. ஒரு புத்தகம் 65 ரூபாய்

*** பின்வரும் பொருட்களை வாங்கும் போது செலுத்த வேண்டிய பணத்தொகை யாது?**

1. ஒரு பேனா, ஒரு பென்சில் கூராக்கி

ஒரு பேனையின் விலை = ..............................

ஒரு பென்சில் கூராக்கியின் விலை = ..............................

செலுத்த வேண்டிய மொத்த பணம் = ..............................

2. ஒரு புத்தகம், ஒரு அடிமட்டம்

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

3. ஒரு நிறப்பெட்டி, ஒரு அழிறப்பர்

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

4. ஒரு அடிமட்டம், ஒரு நிறப்பெட்டி

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

5. ஒரு பேனை, ஒரு புத்தகம்

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

........................................................................................= ..............................

www.lkedu.lk

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved



# புலமைக்கதிர் 4

## தமிழ் -07

01. பின்வரும் பந்தியைநன்றாகவாசித்துவினாக்களுக்குவிடைதருக?

நாம் நம் பண்டைய விளையாட்டுக்களை முற்றிலும் மறந்துவிட்டோம். அவற்றில் ஒன்றுதான் கெந்திவிளையாட்டு. ஓடுபவர்களை ஒற்றைக்காலால் கெந்தி அடித்துத் தொடுவது கெந்திவிளையாட்டாகும். இது சிறுவர்களுக்கு சிறந்தஉடற்பயிற்சி ஆகும். கெந்தி விளையாட்டு பிள்ளைகளின் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளித்து, அவர்களின் சோம்பேறித்தனத்தைக் குறைக்கிறது.

இது கால்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலைத் தருவதோடு, தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது. கெந்திவிளையாட்டிற்கு இத்தனை பேர் விளையாட வேண்டும் என வரைமுறை எதுவும் இல்லை. இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்கு பற்றலாம்.

1) பந்தியில் கூறப்படும் விளையாட்டு எது?

..............................................................................................................................

2) இவ்விளையாட்டின் நன்மை ஒன்றுதருக?

..............................................................................................................................

3) "விளையாட்டு" என்ற சொல்லில் உள்ள உயிர்க்குறி யாது?

..............................................................................................................................

4) நவீன என்பதன் எதிர்ப் பதத்தை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக?

..............................................................................................................................

5) இவ் விளையாட்டில் எத்தனை பேர் விளையாட முடியும்?

..............................................................................................................................

02) பின்வரும் ஒவ்வொருசொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டதுஎனக் கண்டுபிடித்து அச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. மை, பேனா, மலர், புத்தகம், பென்சில் (............................)
2. பாடகன், அம்மா, அப்பா, அக்கா, அண்ணன் (............................)
3. மயில், குருவி, மரை, குயில், காகம் (............................)
4. மரம், மான், வேர், கிளை, தண்டு (............................)
5. ஆசிரியர், அதிபர், மாணவர், பெற்றோர், நடிகன் (............................)

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි ) முழுப் பதிப்புரிமையுடையது ) All Rights Reserved )



03) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக?

1. உண்டி - ......................................
2. துக்கம் - ......................................
3. நாடு - ......................................
4. உவகை - ......................................
5. செவி - ......................................

04) பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக?

1. ஒளி - ......................................
2. ஞாபகம் - ......................................
3. சாதகம் - ......................................
4. முற்பகல் - ......................................
5. சுத்தம் - ......................................

05) பின்வரும் சுயவிபரப் படிவத்தைப் பூர்த்திசெய்க?

1. மாணவர் முழுப்பெயர் :- ......................................................................
2. முகவரி :- ..........................................................................................
 ..........................................................................................
3. பிறந்ததிகதி : ......................................................................................
4. கற்கும் பாடசாலை : ..................................................................
5. வகுப்பாசிரியரின் பெயர்: ...................................................................

06) பின்வரும் சொற்களைச் சேர்த்துஎழுதுக?

*1.* பனை+வேர்= ........................................ *4.* முள் +புதர்= ..................................................
*2.* மா +இலை= ........................................ *5.* பொன் +காசு= ..............................................
*3.* பழம் +வகை= ........................................

07) பின்வரும் தொடர்களுக்குரியதனிச் சொல்லைஎழுதுக.

*1.* நம்பமுடியாத கதை : ...................................................................
*2.* வீண் செலவு செய்பவன் : ...................................................................
*3.* ஒரேபாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் :...................................................
*4.* தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர்:- ........................................................
*5.* தெருக்கள் கூடுமிடம் : ...................................................................

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved /



10) பின்வரும் ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக எழுதுக?

1.சேவல் இனிமையாகக் கூவியது.

..............................................................................................................................

2. பட்டம் காற்றில் ஆடி அசைந்தது.

..............................................................................................................................

3. மான் வேகமாக ஓடியது.

..............................................................................................................................

4. நீர்க்காகம் நீரில் நீந்தியது.

..............................................................................................................................

5. பறவை வானில் பறந்தது.

..............................................................................................................................

11) கோடிட்ட இடத்தைப் பூர்த்திசெய்துஎழுதுக?

(அடைப்புக்குள் தரப்பட்டசொற்களைப் பயன்படுத்துக)

1. நான் கடந்த வருடம் இந்தியாவுக்குப் (போ)

..................................................................

2. என் தங்கை இப்போது வகுப்பில் (இரு)

......................................................................

3. அம்மா நாளைக்குப் புத்தகம் (வாங்கு)

......................................................................

4. மழை வரக் கண்டால் மயில் (ஆடு)

.......................................................................

5. இன்று கடும் மழை (பெய்)

......................................................................

12) பின்வரும் சொற்களுக்குரிய ஆண்பால், பெண்பாற் சொற்களை எழுதுக?

1. நடிகன் - ..............................

2. சுந்தரன் - ..............................

3. .............................. - மூத்தவள்.

4. சீமான் - ..............................

5. .............................. - புத்திரி.

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved



# புலமைக்கதிர் 4

## சுற்றாடல் சார் செயற்பாடு -07

* **பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

**1. உருவில் காட்டப்படுவது சூரிய நமஸ்காரத்தின் எத்தனையாம் படிமுறையாகும் ?**



1. 9 ம் படிமுறை
2. 6 ம் படிமுறை
3. 4 ம் படிமுறை

**2. சூரிய நமஸ்காரம் செய்ய உகந்த நேரம் எது?**

1. காலை 2. மதியம் 3. இரவு

**3. கண், காது இரு உறுப்புக்கள் மூலமும் தகவல் பெறக்கூடிய ஊடகம்**

1. வானொலி 2. பத்திரிகை 3. தொலைக்காட்சி

**4. கழிச்சல் நோயை ஏற்படுத்தக்கூடிய பிரதான காரணி எது?**

1. ஈ 2. எலி 3. நுளம்பு

**5. விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகளுக்கு உதவும் பிராணிகள் எவை?**

1. மண்புழு, செண்பகம், ஆந்தை
2. பன்றி, முயல், கிளி
3. காகம், வெட்டுக்கிளி, முள்ளம்பன்றி

**6. கரப்பான், வெட்டுக்கிளி போன்றவற்றின் குருதியின் நிறம் எது?**

1. சிவப்பு 2. நீலம் 3. வெள்ளை

**7. நிறக்கடதாசிகளைக் கிழித்தொட்டிச் செய்யும் ஆக்கத்தின் பெயர் என்ன?**

1. கொலாஜ் 2. ஓரிகாமி 3. கிறுக்கல்சித்திரம்

**8. நீர்ப்பிசாசு அமைப்பு எத்தொழிலாளருக்கு பயனுடையது**

1. தச்சன்மாருக்கு 2. விவசாயிகளுக்கு 3. மீனவருக்கு

**9. இக்குறியீட்டின் விளக்கம் யாது?**



1. குடை பிடிக்கவும்
2. நனையாமல் பாதுகாக்கவும்
3. தூறல் மழை

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

**10. அதிக நீர்த்தேவையுள்ள தாவரம் எது?**

1. நெல் 2. சோளம் 3. முருங்கை

திரு. க. சந்திரகுமார். (0774940556) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---



www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved /


**11. இலங்கைக்கு வடக்கேயுள்ள நாடு எது?**

1. நேபாளம் 2. மாலைதீவு 3. இந்தியா

**12. இலங்கையின் மிக நீளமான நதி எது?**

1. கல்யாணிநதி 2. அம்பன்கங்கை 3. மகாவலிகங்கை

**13. தாவர இலைகளால் தமது கூட்டை அமைக்கும் பிராணி**

1. அணில் 2. முசிறு 3. கொக்கு

**14. குழுவாக விளையாடும் விளையாட்டு அல்லாதது?**

1. தட்டெறிதல் 2. எறிபந்து 3. கரப்பந்து

**15. பானம் தயாரிக்கப் பயன்படும் பூ எது?**

1. முருங்கை 2. அகத்தி 3. வில்வித்திரியம்

**02. அட்டவணை A க்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தை B யில் இருந்து தெரிந்து உரிய கூட்டினுள் இடவும்.**

| A | | B |
|---|---|---|
| வகுப்பறைச் சுத்தம் | | 1. தொலைக்காட்சி |
| புத்தகத்தைப் பாதுகத்தல் | | 2. முத்திரை |
| கட்புல செவிப்புல சாதனம் | | 3. பத்திரிகை |
| அஞ்சல் அலுவலகம் | | 4. தூசுதுடைப்பான் |
| அச்சு ஊடகம் | | 5. உறைபோடுதல் |

புலமைக்கதிர், திரு. க. சந்திரகுமார்

සියලුම හිමිකම් ඇවිරිණි ) முழுப் பதிப்புரிமையுடையது ) All Rights Reserved )



## பாதுகாப்பும் கரிசனையும்

* பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

1. இயற்கையாக விபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் 4 தருக?

   i. ......................................................................................................

   ii. ......................................................................................................

   iii. ......................................................................................................

   iv. ......................................................................................................

2. மனித செயற்பாடுகள் காரணமாக விபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் 4 தருக?

   i. ......................................................................................................

   ii. ......................................................................................................

   iii. ......................................................................................................

   iv. ......................................................................................................

3. எமது சூழலில் காணப்படும் பாதுகாப்பற்ற இடங்கள் 4 தருக?

   i. ......................................................................................................

   ii. ......................................................................................................

   iii. ......................................................................................................

   iv. ......................................................................................................

4. மழைக் காலங்களில் ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தங்கள் 2 தருக?

   i. ......................................................................................................

   ii. ......................................................................................................

5. எமது சுற்றாடலில் சீருடை அணிந்து தொழிலில் ஈடுபடுவோர் யாவர் என பட்டியற் படுத்துக?

| தொழில் | அணியும் சீருடை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

www.lkedu.lk

ந்திரகுமார்

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved



# தெரிந்து தெளிதல் 5

## நீர் மின்சாரம்

நீர் மின் ஆற்றல் நீரின் இயக்க ஆற்றலைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்சாரமே நீர் மின் ஆற்றல் எனப்படும். அதாவது, புவியீர்ப்பு விசையால் இயற்கையாக பாயும் நீரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றலைக் குறிக்கும். புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்யும் முறைகளில் நீர்மின் உற்பத்தி பெரும் பங்கு வகிக்கிறது.





## காற்றாலை மின்சாரம்

காற்றுத் திறன் அல்லது காற்று மின்சாரம் எனப்படுவது காற்றிலிருந்து மின்னாற்றலைப் பெறுவதைக் குறிக்கின்றது. அதாவது, காற்றுச் சுழலிகளைப் பயன்படுத்திக் காற்றிலிருந்து மின்னாற்றலை உற்பத்தி செய்யும் பொறிமுறையாகும்

## சூரிய ஆற்றல் மின்சாரம்

**சூரிய ஒளி மற்றும் வெப்பத்திலிருந்து நேரடியாக பெறப்படும் ஆற்றல் சூரிய ஆற்றல் (solar energy) எனப்படுகிறது. சூரிய ஆற்றல் நேரடியாக மட்டுமின்றி மறைமுகமாகவும் மற்ற மீள உருவாக்கக்கூடிய ஆற்றல்களான, காற்றாற்றல், நீர்மின்னியல், மற்றும் உயிரியல் தொகுதி (biomass) ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு பெருமளவில் துணை புரிகிறது. பூமியில் விழும் சூரிய ஆற்றலில் மிகவும் சிறிய பகுதியே ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தப்படுகிறது.**



**சூரிய ஆற்றலில் இருந்து மின்சாரம் இரண்டு வகைகளில் தயாரிக்கப்படுகிறது.**

1. **சூரிய ஒளியில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரம்** (Photovoltaic).
2. **சூரிய வெப்பத்தில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரம்** (Solar Thermal).

**சூரிய சக்தியானது வெப்பமாகவும், ஒளியாகவும் புவியை அடைகின்றது.**

**சூரிய ஒளியை பயன்படுத்தி மின்னை உற்பத்தி செய்ய பயன்படும் உபகரணம் சூரியப்படல் ஆகும்.**



திரு. க. சந்திரகுமார். (0774940556) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---